# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032**
**முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)**

முறையீட்டு மனு எண்.46/2016/பே.2
ஆணை நாள். 05–07–2018.

திருமதி. சே. சுலைகாள்,
41/1, கார்த்திகை மடம் தெரு,
கல்லிடைக்குறிச்சி ,
அம்பாசமுத்திரம் வட்டம்,
திருநெல்வேலி மாவட்டம்.– 627416

-- முறையீட்டு மனுதாரர்.

1. செயல் அலுவலர்,
   கல்லிடைக்குறிச்சி பேரூராட்சி,
   கல்லிடைக்குறிச்சி.
2. திருமதி வீ. பார்வதி,
   வரிவிதிப்பாளர்,
   கல்லிடைக் குறிச்சி பேரூராட்சி
3. திரு முத்தைய்யா,
   பதிவறை எழுத்தர்,
   கல்லிடைக்குறிச்சி பேரூராட்சி.

-- எதிர் மனுதாரர்கள்.

ஆணை.

திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம் வட்டம், கல்லிடைக்குறிச்சி, 41/1 கார்த்திகை மடம் தெருவில் வசிக்கும், திருமதி S. சுலைஹாள், முறையீட்டு மனுதாரரின் 22.01.2016ம் நாளிட்ட புகார் மனு இம்முறைமன்ற நடுவத்தில் 27.01.2016ல் பெறப்பட்டு முறையீட்டு மனு எண். 46/2016 ஆக பதிவு செய்யப்பட்டது.

மேற்படி முறையீட்டு மனு மீது அறிக்கைகள் பெறப்பட்டும், விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டும் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

முறையீட்டு மனுதாரர் தனது முறையீட்டு மனுவில், திருநெல்வேலி மாவட்டம், கல்லிடைக்குறிச்சி பேரூராட்சி செயல் அலுவலர் மீது கீழ்கண்ட புகார்களை தெரிவித்து விசாரண கோரி இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்துள்ளார்.

தானும், தனது மகளும் மேற்கண்ட விலாசத்தில் வசித்து வருவதாகவும், அம்பாசமுத்திரம் முன்சீப் வழக்காடு மன்றத்தில் மேற்படி வீட்டு பத்திரத்தின் மீது (District Munsiff Court) O.S.No. 23/2013–ல் வழக்கு நிலுவையில் உள்ளது என தெரிவித்துள்ளார். இந்நிலையில், கல்லிடைக்குறிச்சி பேரூராட்சியின் மூலம் மேற்படி வீட்டிற்கு வீட்டு வரி ரசீதும், குடிநீர் இணைப்பு வரியும் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளதாகவும், இது குறித்து பேரூராட்சியிடம் கேட்டதற்கு தனக்கு சரியான பதில் கிடைக்காததால் நான் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறைக்கு மனு செய்ததாகவும், மேற்படி துறையினரால் 21.12.2015ல் உள்ளாட்சி அமைப்புகளின் முறைமன்ற நடுவத்தில் புகார் மனு செய்ய அறிவுறுத்தியதின் பேரில், தான் இம்மனுவினை விசாரணை கோரி இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்துள்ளதாக தெரிவித்துள்ளார்.

இம்முறைமன்ற நடுவ 10.02.2016ம் நாளிட்ட அறிவிப்பாணை மூலம் மேற்படி முறையீட்டு மனுவிற்கான விளக்கி அறிக்கையினை சமர்ப்பிக்கத் தெரிவித்து, கல்லிடைகுறிச்சி பேரூராட்சி செயல் அலுவலருக்கு ஆணையிடப்பட்டது.

கல்லிடைக்குறிச்சி பேரூராட்சி செயல் அலுவலர், தனது கடித ந.க.எண். 34/2016/நாள்.09.03.2016 ன்படி தனது அறிக்கையினை கீழ்கண்டவாறு சமர்ப்பித்துள்ளார்.

கல்லிடைக்குறிச்சி பேரூராட்சி வார்டு எண்–20, கார்த்திகை மடம் தெரு கதவு எண்.41/1/22A, கட்டிடம் மற்றும் குடிநீர் இணைப்பு எண்.4078 உள்ள சொத்தானது திருமதி கலைகாள் என்பவரால் செட்டில்மெண்ட் பத்திரம் (பதிவு எண்.684/2008) நாள் 20.05.2008ன் மூலம் மேற்படி சே.கலைகாள் தனது மகளான மைனர் A. கலாவைக்கு கார்டியன் நிலையில் சே.கலைகாள் தாயாரான திருமதி.முகமதாள் என்பவருக்கு செட்டில்மெண்ட் செய்து கொடுத்துள்ளதாக தெரிவித்து மேற்படி பத்திர நகலையும் இணைத்து சமர்ப்பித்துள்ளார். மேலும் மேற்படி செட்டில்மெண்ட் பத்திரத்தில், பத்திரத்தினை மாற்றவும், ரத்து செய்யவும் தனக்கு அதிகாரம் கிடையாது என ஆவணத்தில் எழுத்தப்பட்டுள்ளதால் அதன்படி புது கதவு எண்.41/1, பழைய கதவு எண்.22–A, உள்ள வீடும் அதன் குடிநீர் இணைப்பு 4078–ம் மைனர் A. கலாவா, கார்டியன் உ.முகமதாள் என்பவருக்கு பாத்தியமாகிறது என்பதை கருத்தியலாகக் கொண்டும், மேற்படி ஆவணத்தின்படி மைனர் ஏ.கலாவாவுக்கு கார்டியனான திருமதி உ.முகமதாள் என்பவர் 16.06.2015ல் பெயர் மாற்றம் செய்ய மனு செய்ததாகவும், இதன் அடிப்படையில் பேரூராட்சி வரி வசூலரின் தல ஆய்வு அறிக்கை நாள் 18.06.2015ன்படி பெறப்பட்டு பெயர் மாற்றம் செய்யப்பட்டதாக தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் திருமதி செ.கலைகாள், முறையீட்டு மனுதாரர் மேற்படி பொருள் சம்பந்தமாக தகவல் பெறும் உரிமை சட்டத்தின் கீழ் 23.09.2015, 30.9.2015, 16.10.15, மற்றும் 22.12.15 ஆகிய தேதிகளில் விவரங்கள் கோரியதாகவும் அவற்றிற்கு பேரூராட்சி செயல் அலுவலரால் விவரங்கள் அளிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். மேலும் பேரூராட்சி ஆவணங்களில் மேற்கண்ட சொத்து தொடர்பாக நீதிமன்ற வழக்குகள் நிலுவையில்

உள்ளதாகவோ, நீதிமன்ற தடையாணை உள்ளதாகவோ எந்த அறிவிப்பும் பேரூராட்சிக்கு கிடைக்கப்பெறவில்லை எனவும் கல்லிடைக்குறிச்சி பேரூராட்சி செயல் அலுவலர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார். எனவே புகார் மனுதாரரான திருமதி சே.சுலைகாள் என்பவரது மைனர் மகளான மைனர் A. கஸாலா கார்டியன் உ.முகமதாள் என்பவர் பெயருக்கு பதிவு செய்யப்பட்ட பத்திர ஆவணத்தின்படி பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக தனது அறிக்கையில் பேரூராட்சி செயல் அலுவலர் தெரிவித்துள்ளார்.

இம்முறைமன்ற நடுவ 15.04.2016ம் நாளிட்ட அறிவிப்பாணை மூலம் இப்பொருள் தொடர்பாக அம்பாசமுத்திரம் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள வழக்கு எண்.O.S.No. 23/2013-ன் தற்போதைய நிலையினை தெரிவிக்கக் கோரி மனுதாரருக்கு ஆணையிடப்பட்டது.

முறையீட்டு மனுதாரர் மேற்படி அறிவிப்பாணைக்கு, மேற்படி வழக்கு தொடர்பாக மேற்படி இடத்தினை நீதிமன்ற ஆணையர் பார்வையிடுவதை முன்னிட்டு 14.06.2016 வரை வாய்தா வழங்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

இம்முறைமன்ற நடுவ 22.12.2016ம் நாளிட்ட அழைப்பாணையில் முறையீட்டு மனுதாரர் தனது முறையீடு சம்பந்தமாக தனது விளக்கத்தினை பதிவு செய்ய இம்முறைமன்ற நடுவத்தில் 01.02.2017ல் ஆஜராக தெரிவித்து ஆணையிடப்பட்டது.

முறையீட்டு மனுதாரர் திருமதி எஸ்.சுலைகாள் இம்முறைமன்ற நடுவத்தில் 01.02.2017ல் ஆஜராகி மேற்படி முறையீடு குறித்து தனது விளக்கத்தினை கீழ்கண்டவாறு பதிவு செய்துள்ளார்.

"......22.01.2016ம் நாளிட்ட முறையீட்டு மனு தன்னால் அனுப்பப்பட்டது என்றும், அதற்கு முன்னர் லஞ்சஒழிப்புத் துறைக்கு தான் மனு அனுப்பியிருந்ததாகவும், இலஞ்ச ஒழிப்புத்துறையினரால் உள்ளாட்சி அமைப்புகளின் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்புமாறு கூறியதாகவும் தெரிவித்துள்ளார். கல்லிடைக்குறிச்சி பேரூராட்சியில், கார்த்திகை மடம் தெரு கதவு எண்.41/1 வீட்டின் சொத்து வரி 2005 ம் ஆண்டு முதல் 2015ம் ஆண்டு வரை தன் பெயரில் இருந்ததாகவும், தண்ணீர் வரி ரசீது தனது தாயார் பெயருக்கு மாற்றம் செய்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார். தனக்கும் தனது தாயாருக்கும் அம்பாசமுத்திரம் நீதிமன்றத்தில் வழக்கு உள்ளது. (வழக்கு எண். O.S.No. 23/2013) தற்போது அட்வகேட் கமிஷனில் உள்ளதாகவும் தெரிவித்துள்ளார். பேரூராட்சியில் இருந்து தனது சொத்திற்கு பெயர் மாறறம் செய்யப்பட்ட போது தனக்கு எந்தவிதமான அறிவிப்பும் வரவில்லை எனவும் தெரிவித்துள்ளார்.

ஆவண எண்.684/2008 ன்படி தன்னை மிரட்டியும், தன்னை பத்திரத்தினை படிக்கக்கூடாது என தெரிவித்தும் தனது அம்மா பெயருக்கும் தனது மகள் பெயருக்கும் ஒரு செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி கல்லிடைக்குறிச்சி சார் பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டதாகவும் தெரிவித்துள்ளார். அதில் தனது மகள் குறித்து வருகின்ற வரிகள் எல்லாம் அடித்து முறைகேடு செய்யப்பட்டுள்ளதாகவும், மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு உள்ளதாகவும், இதனை எதிர்த்து அம்பாசமுத்திரம் நீதிமன்றத்தில் வழக்கு எண்.O.S.No. 23/2013 ஜூன் 2016ல் நீதிமன்றத்தில் அட்வகேட் கமிஷன் போட்டுள்ளதாக தெரிவித்துள்ளார். வழக்கு நிலுவையில் உள்ளபோது தனக்கு எந்தவிதமான அறிவிப்பும்

கொடுக்காத போது, கல்லிடைக்குறிச்சி பேரூராட்சி செயல் அலுவலர் ஒருதலை பட்சமாக தனது மகளுக்கு கார்டியனாக தனது தாயார் மீது பெயர் மாற்றம் செய்துள்ளதாகவும் வழக்கு நீதிமன்றத்தில் உள்ளதால் வழக்கு முடியும் வரை எந்தவித பெயர் மாற்றம் செய்யக்கூடாது என ஆணையிடுமாறு கோரியுள்ளார்.

தான் இது குறித்து வரி வசூல் செய்யும் திருமதி. பார்வதியிடம் கேட்டதாகவும், அதற்கு அவர்கள் எதுவும் செய்ய முடியாது எனவும் தனது அம்மாவை போய் பாருங்கள் என சொன்னதாகவும், திரு. செந்தில்குமார் என்பவர் மீண்டும் தன்னிடம் வந்து தனது அம்மாவை பார்க்கச் சொன்னதாகவும் தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார். இது குறித்து பேரூராட்சியில் தகவல் பெறும் உரிமை சட்டத்தின் கீழ் விவரங்கள் கேட்டதாகவும், பேரூராட்சியால் அளித்த ஆவணங்களை தற்போது சமர்ப்பித்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

இம்முறைமன்ற நடுவ 21.06.2017ம் நாளிட்ட அறிவிப்பாணையில் முறையீட்டு மனுதாரர் மேற்படி பெயர் மாற்றத்தினை எதிர்த்து மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்துள்ளதாகவும் மேற்படி வழக்கு எண்.23/2013 நிலுவையில் உள்ளதாகவும் தெரிவித்துள்ளார். எனவே அம்பாசமுத்திரம் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள வழக்கு எண்.23/2013-ன் உண்மைத் தன்மையின் விவரத்தினை தெரிவிக்க கல்லிடைக்குறிச்சி பேரூராட்சி செயல் அலுவலருக்கு ஆணையிடப்பட்டது.

கல்லிடைகுறிச்சி பேரூராட்சி செயல் அலுவலர் தனது கடித ந.க.எண். 34/2016/நாள். 11.07.2017ன் மூலம் முறையீட்டு மனுதாரரால் தெரிவிக்கப்பட்ட நீதி மன்ற வழக்கு குறித்து அரசு வழக்கறிஞர் மூலம் கருத்துரு பெற்று சமர்ப்பித்துள்ளார்.

மேற்படி கருத்துருவில் அரசு வழக்கறிஞர் திருமதி.சே. சுலைகாள் என்பவர், தனது தயாரை கார்டியனாக வைத்து தனது மகளான கஸாலாவுக்கு 20.05.2008ல் பதிவு செட்டில் மெண்ட் ஆவணம் கல்லிடைக்குறிச்சி வார்டு எண்.20-ல் உள்ள நத்தம் சர்வே எண்.422/3 ல் கதவு எண்.22-A வீட்டினை பொருத்து பிறப்பித்து கொடுத்துள்ளதாகவும் மேற்படி செட்டில்மெண்ட் ஆவணம் நாளது தேதி வரை ஊர்ஜிதத்தில் உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மாவட்ட உரிமையியல் நீதிமன்றதில் நிலுவையில் உள்ள வழக்கு எண். O.S.No.23/2013, பெயர்மாற்றம் செய்தது தொடர்பாக பேரூராட்சியை தரப்பினராக சேர்த்து வழக்கு தாக்கல் செய்யவில்லை எனவும், மேற்படி வழக்கு திருமதி முகமதாள், திரு.ஷேக் மீரான் மற்றும் திரு. வேல்முருகன் ஆகியோர் மீது தாக்கல் செய்தது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மனுதாரர் தனது முறையீட்டு மனுவில் தெரிவித்துள்ளவாறு கதவு எண். 41/1 ல் பெயர் மாற்றம் செய்தது தொடர்பான வழக்கு இல்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இம்முறைமன்ற நடுவ 21.09.2017ம் நாளிட்ட அழைப்பாணையில் முறையீட்டு மனுதாரர் தனது மனுவில் தெரிவித்துள்ள சாட்சிகளான திரு ஆர்.செல்லபாண்டியன் மற்றும் திரு ஆர். முருகன் ஆகியோரின் விளக்கத்தினை பெற இம்முறைமன்ற நடுவத்தில் 29.11.2017ல் ஆஜர்படுத்த முறையீட்டு மனுதாரருக்கு ஆணையிடப்பட்டது.

முறையீட்டு மனுதாரர் தனது 20.9.2017ம் நாளிட்ட கடிதத்தில் தன்னால் மேற்கண்ட நபர்களை ஆஜர்படுத்த இயலாமைக்கான காரணத்தினை இம்முறைமன்ற நடுவத்திற்கு தெரிவித்துள்ளார்.

இம்முறைமன்ற நடுவ 6.03.2018ம் நாளிட்ட அழைப்பாணையில் கல்லிடைக்குறிச்சி பேரூராட்சி செயல் அலுவலர், வரி விதிப்பாளர், மற்றும் பதிவறை எழுத்தர் ஆகியோர் மேற்படி முறையீட்டு மனு தொடர்பாக தங்களின் விளக்கங்களை பதிவு செய்ய இம்முறைமன்ற நடுவத்தில் 03.05.2018 அன்று ஆஜராக தெரிவித்து ஆணையிடப்பட்டது.

கல்லிடைக்குறிச்சி பேரூராட்சி செயல் அலுவலர் தனது 02.05.2018ம் நாளிட்ட கடிதத்தில் தனக்கு உடல் நிலை சரியில்லாத காரணத்தைக் கூறி மற்றொரு நாளில் விசாரணைக்கு உத்திரவிட வேண்டிக்கொண்டுள்ளார்.

03.05.2018 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் ஆஜரான கல்லிடைக்குறிச்சி பேரூராட்சி பதிவறை எழுத்தர் (ஓய்வு) திரு கே.முத்தையா தனது வாக்குமூலத்தினை கீழ்கண்டவாறு பதிவு செய்துள்ளார்.

"......தான் 28.02.2015ல் ஓய்வு பெற்றுவிட்டதாகவும், மனுதாரர் திருமதி சுலைகாள் என்பவரை தான் பார்த்தது இல்லை எனவும் பெயர் மாற்றத்திற்கும் தனக்கும் சம்பந்தம் இல்லை எனவும் அப்போது செயல் அலுவலராக இருந்தவர்தான் தற்போதும் செயல் அலுவலராக பணிபுரிவதாக தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார்.

03.05.2018ல் இம்முறைமன்ற நடுவத்தில் ஆஜரான கல்லிடைக்குறிச்சி பேரூராட்சி வரி வசூலர் திருமதி வீ. பார்வதி தனது வாக்குமூலத்தினை கீழ்கண்டவாறு பதிவு செய்துள்ளார்.

".......திருமதி சுலைகாள் என்பவருடைய மனு விவரம் தனக்கு தெரியும் எனவும் பெயர் மாற்றம் மற்றும் சொத்து வரி வதிப்பு செய்வதற்காக யார் பேரூராட்சிக்கு மனு செய்தாலும் நேரடியாக செயல் அலுவலரிடம் வருவார்கள் எனவும் தெரிவித்துள்ளார். அவர்கள் எந்த பகுதியினை சார்ந்தவர்கள் என அறிந்து அந்த பகுதியில் உள்ள வரித்தண்டலருக்கு மனுவினை கொடுப்பதாகவும் தெரிவித்துள்ளார். திருமதி. முகமதாள் என்பவர் தான் வீட்டு வரி எல்லாம் கட்டுவதாகவும், முதலில் வழக்கில் உள்ள வீட்டின் சொத்து வரி விதிப்பு மனுதாரர் திருமதி. சுலைகாள் பெயரில் இருந்ததாகவும், 16.06.2015ல் தனது பெயருக்கு மாற்றம் செய்யக் கோரி திருமதி. முகமதாள், என்பவர் மனு கொடுத்ததாகவும் தெரிவித்துள்ளார். அந்த மனுவுடன் வீடு சம்பந்தமான பத்திரம் கொடுத்ததாகவும், ஆவணங்களின் அடிப்படையிலேயே சொத்து வரி விதிப்பு மாற்றம் செய்யப்பட்டது எனவும், தான் எந்த தவறும் செய்யவில்லை எனவும் மனுதாரர் திருமதி சுலைகள் என்பவர் தன்னை சந்திக்கவில்லை எனவும் தனது வாக்குமூலத்தில் திருமதி வீ.பார்வதி வரி வசூலர் தெரிவித்துள்ளார்.

இம்முறைமன்ற நடுவ 10.05.2018ம் நாளிட்ட அழைப்பாணையில் கல்லிடைக்குறிச்சி பேரூராட்சி செயல் அலுவலரின் விளக்கம் பெற இம்முறைமன்ற நடுவத்தில் 26.06.2018ல் ஆஜராக தெரிவித்து ஆணையிடப்பட்டது.

கல்லிடைக்குறிச்சி பேரூராட்சி செயல் அலுவலர் திரு.ஆ.முத்துக்குமார், இம்முறைமன்ற நடுவத்தில் 26.06.2018ல் ஆஜராகி தனது வாக்குமூலத்தினை கீழ்கண்டவாறு பதிவு செய்துள்ளார்.

"........தான் கடந்த மூன்று ஆண்டுகளாக கல்லிடைக்குறிச்சி பேரூராட்சியில் செயல் அலுவலராக பணிபுரிவதாகவும், திருமதி கலைகாள் என்பவரின் புகார் மனு குறித்து தனக்கு தெரியும் எனவும் தெரிவித்துள்ளார். இது குறித்து 09.03.2016ம் நாளிட்ட கடிதம் மூலம் தன்னுடைய பதில் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும், மனுதாரர் இது குறித்து தகவல் பெறும் உரிமை சட்டத்தின் கீழ் கோரிய தகவல்கள் யாவும் அளிக்கப்பட்டதாகவும் தெரிவித்துள்ளார். மனுதாரர் தனது மைனர் மகளான கஸாலாவுக்கு எழுதிக் கொடுத்த செட்டில்மெண்ட் ஆவணத்தில் மனுதாரருடைய தாயாரை அதாவது மைனர் கஸாலாவின் பாட்டியை காப்பாளராக (Guardian) நியமித்து ஆவணம் பதிவு செய்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார். வழக்கு நீதிமன்றத்தில் இருப்பது குறித்து தனக்கு எந்த தகவலும் இல்லை எனவும், அசல் ஆவணம் தன்னால் பார்க்கப்படவில்லை எனவும், பில் கலெக்டர் தான் பார்த்ததாகவும் தனது வாக்குமூலத்தில் பேரூராட்சி செயல் அலுவலர் தெரிவித்துள்ளார். அசல் ஆவணத்தில் முக்கிய பதிவுகள் அடித்துள்ள விவரத்தினை தான் சரிபார்க்கவில்லை எனவும், பில் கலெக்டர் தான் சரிபார்த்ததாகவும், எனவே பெயர் மாற்றம் செய்யப்படும்போது ஏற்கனவே சொத்து யார் பெயரில் இருந்ததோ அவர்களுக்கு எந்தவித அறிவிப்பும் தன்னால் அனுப்பப்படவில்லை எனவும் தெரிவித்துள்ளார். தன்னால் தல விசாரணை மேற்கொண்டு அறிக்கை தருமாறு வரி வசூல் செய்பவருக்கு குறிப்பு செய்யப்பட்டதாகவும், ஆனால் அவர் சொத்து வரி விதிப்பு யார் பெயரில் உள்ளதோ அவரிடம் விசாரிக்கவில்லை எனவும், மனுதாரர் திருமதி .கலைகாள் 22.09.2015ம் நாளிட்ட மனுவில் கல்லிடைக்குறிச்சி பேரூராட்சி செயல் அலுவலர் சொத்தினை பெயர் மாற்றம் இடம் பெறுவதற்கு எந்தவித தகவலும் ஏன் தரவில்லை எனவும் எப்படி பெயர் மாற்றம் செய்யப்பட்டது எனவும் தனக்கு சட்டரீதியான தகவலும் இல்லை எனவும் தெரிவித்துள்ளதாக பேரூராட்சி செயல் அலுவலர், கல்லிடைக் குறிச்சி தனது வாக்குமூலத்தில் பதிவு செய்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து கல்லிடைக்குறிச்சி பேரூராட்சி செயல் அலுவலர் தனது குறிப்பாணை ந.க.எண். 34/2016/நாள் 28.06.2018ல், கல்லிடைக்குறிச்சி பேரூராட்சியின் உத்திரவு மூ.மு.எண். 40/2015-16 நாள். 18.06.2015ல் வழங்கப்பட்ட பெயர்மாற்ற உத்திரவினை மேற்படி சொத்து தொடர்பாக வில்லங்கம் உள்ளதாக ஆட்சேபணை பெறப்பட்டுள்ளதாலும், இது சம்பந்தமாக மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் அம்பாசமுத்திரம் நீதிமன்றத்தில் வழக்கு எண். O. S 23/2013 நிலுவையில் உள்ளதைத் தொடர்ந்தும் செட்டில்மெண்ட் ஆவணத்தில் பெரும்பான்மை பக்கங்களில் அடித்தல் மற்றும் வரி பிளப்புகள் செய்யப்பட்டு ஆவணத்தின் மெய்த்தன்மை குறித்து சந்தேகத்திற்கு இடம் அளிக்கும் நிலையில் உள்ளதாலும் 18.06.2015ல் பிறப்பிக்கப்பட்ட பெயர் மாற்ற உத்திரவு நிறுத்தி வைத்து பெயர் மாற்ற உத்திரவிற்கு முந்தைய நிலையிலேயே திருமதி எஸ்.கலைகாள் என்பவர் பெயரிலேயே வரி விதிப்பில் தொடர அனுமதிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்டு எதிர் மனுதாரர்களுக்கு தெரிவிக்கப்பட்டு நகல் இம்முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. இதன்படி மனுதாரரது கோரிக்கைக் குறித்து உரிய நடவடிக்கை செயல் அலுவலரால் தற்போது எடுக்கப்பட்டுள்ளது புலனாகிறது.

எனவே இம்முறைமன்ற நடுவம் இப்பொருள் தொடர்பான தொடர் நடவடிக்கைகளை கைவிடுவதென முடிவெடுத்து அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2018 ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 05 –ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிப்படுகிறது.

–//ஒப்பம்//–

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

–//உத்திரவின்படி – அனுப்பப்படுகிறது//–

செயலாளர்.

**பெறுநர்**

1.திருமதி. சே. சுலைகாள்,
41/1, கார்த்திகை மடம் தெரு,
கல்லிடைக்குறிச்சி ,
அம்பாசமுத்திரம் வட்டம்,
திருநெல்வேலி மாவட்டம்.– 627416

2.செயல் அலுவலர்,
கல்லிடைக்குறிச்சி பேரூராட்சி,
திருநெல்வேலி மாவட்டம்,

3.பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்,
திருநெல்வேலி மண்டலம்,
N.G.O. B.Colony,
Jawahar Nagar.
Perumalpuram Post,
திருநெல்வெலி–627007